டாசசுது ௵

௨௰௭. மனுஷாஙகளிலெ அதிசெயிததுக
காறறுககளுஙகடலுமஇவருககு அமைநதுபடி
யுதெஇபபடிபபடிககொததவரொவெனறுசொ
னனாாகள ௵

௨௰௮. அவா அககரையிலெகெரகெசெனரு
டையதெசததிலெவநதபினபுபசாசுபிடிததிரு
நத இரணடுபொ கலலறைகளிலெயிருநதுபுறப
படடு அவருககெதிரெவநதாாகள அவாகளமகா
ஙெஷடுரானபடியால நதவழியாக ஒருததரு
நதுசெலலககூடாமலிருநதுது ௵

௨௰௯. இதொ அவாகளசததமமைவைததுசச அ
வெசுபாருடையகுமாரனெ இயெசுநாதரெ எ
ஙகளுககுமஉமககுமெனன அவசியகால
ததுககுமுனனெயெஙகளைவாதிககிறதுககிஙகெவநதீ
ரொவெனறுசொனனாாகள ௵

௩௰. அவாகளுககபபுறததிலெ அனெகமபன
றிகளொருககூடடமாயமெயநதுகொணடிருநதுது ௵

௩௰௧. ஆமொஙகளையகறறிவிடடால நாஙகளந
பபனறிககூடடததிலெசெலலஎஙகளுககுததாா
நதாருமெனறுபசாசுகளவரைவெணடிககொண
டுது ௵

௩௰௨. அவா அதுகளைபபொஙகொவெனறுதி
ருவுளமபறறினாா அதுகளபுறபபடடுபபனறிககூ
டடததிறசெனறுது இதொ பனறிககூடட
முழுதுநிடடவிழுநதுசமுததிரததிலவிழுந
துதணணீரிலெசெததுபபொசசுது ௵

௩௰௩. அபபொ அதுகளைமெயககிறவாக
ளொடிககரியிலெவநது இநதகாரியஙகளசகலத
தையும பசாசுபிடிததிருநதவாகளுககுசசமபவி
தததையுமஅறிவிததாாகள ௵

௩௰௪. இதொ அநதநகரிமுழுதும இயெசுநா

த

www.WordOfGod.in

தருக்கெதிராகச் சென்று அவரைக் கண்டவுடனே அவர் தங்களுடைய எல்லைகளை விட்டுப் பெயர்ந்து போம்படிக்கு அவரை மன்றாடிக் கொண்டார்கள் ஸ

௯. அதிகாரம்.

௧: திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தினதும் பாவங்களைப் பொறுக்கத் தமக்குத் தத்துவமுண்டென்று ஒப்புவித்ததும். ௯: மத்தேயுவை அழைத்ததும் ஆயக்காரருடனே அசனம்பண்ணினதும். ௧௪: தமது சீஷர்கள் உபவாசமாயிராததுக்குப் பெரியவர்களைப் போதித்ததும். ௨௰: பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் பெருமையாய் சொஸ்தமாக்கினதும். ௨௰௩: ஒரு தலைவனுடைய மரித்த பெண்பிள்ளையை எழுப்பினதும். ௨௰௭: இரண்டு குருடருக்குப் பார்வையுண்டாக்கினதும். ௩௰௨: ஊமையனைச் சொஸ்தமாக்கினதும். ௩௰௫: பட்டணங்களிலும் ஊர்களிலும் வியாதிக்காரர்களைக் குணமாக்கினதும். ௩௰௭: விளைச்சலின் எஜமானிடத்திலே வேலையாட்களுக்காக வேண்டிக்கொள்ளப் புத்தி சொன்னதும் வருமாறு ஸ

அப்பொழுது அவர் படவிலேயேறி இக்கரைப்பட்டுத் தம்முடைய பட்டணத்துக்கு வந்தார். அப்போ படுக்கையிலே கிடக்கிற ஒரு முடவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள் ஸ

௨. இயேசுநாதர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு முடவனிடத்திலே மகனே திடமாயிரு உன்னுடைய பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டதென்று திருவுளம்பற்றினார் ஸ

௩. இதோ ஆகமசாஸ்திரிகளில் சிலர் இவன் தேவதூஷணம் சொல்லுகிறானென்று தங்களுக்குள்ளே எண்ணினார்கள் ஸ

௪. இயேசுநாதர் அவர்களுடைய நினைவுகளைக் கண்டு நீங்கள் உங்கள் இருதயங்களிலே ஏதுக்காகப் பொல்லாப்பை எண்ணுகிறீர்கள் ஸ

௫. ஏதுமென்றால் பாவங்கள் உனக்குப் பொறுக்கப்பட்டதென்று சொல்லுகிறதோ அல்லது எழும்பி உலாவென்று சொல்லுகிறதோ எது எளிதானது ஸ

௬. ஆகிலும் பூமியிலே பாவங்களைப் பொறுக்க மனுஷகுமாரனுக்கு வல்லமையுண்டென்று நீங்கள் அறியத்தக்கதாகவென்று அவர்களுக்குச் சொல்லி முடவனைப் பார்த்து நீ எழும்பி உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போவென்று திருவுளம்பற்றினார் ஸ

௭. அப்பொழுதவன் எழும்பித் தன்னுடைய வீட்டுக்குப் போனான் ஸ

௮. ஜனங்கள் இதைக் கண்டு அதிசயித்து மனுஷருக்கு இப்படிக்கொத்த வல்லமையைக் கொடுத்த தம்பிரானை ஸ்தோத்திரம்பண்ணினார்கள் ஸ

௯. இயேசுநாதர் அவ்விடம்விட்டுப் போகையிலே மத்தேயுவென்று பேர்பட்ட ஒரு மனுஷன் ஆயக்கூடத்திலேயிருக்கிறதைக் கண்டு அவனிடத்திலே என்னைப் பின்பற்றிவாவென்று சொன்னார் அவனெழும்பி அவரைப் பின்பற்றினான் ஸ

௰. அவர் மத்தேயுவுடைய வீட்டிலே அசனம்பண்ணயிருந்தபொழுது சம்பவித்ததாவது இதோ அநேகம் ஆயக்காரரும் பாவிகளுமாய் வந்து இயேசுநாதருடனேயும் அவருடைய சீஷர்களுடனேயும் அசனம்பண்ணக்கூடயிருந்தார்கள்.

௰௧. பரிசேயர்கள் இதைக் கண்டு அவருடைய சீஷர்களிடத்திலே உங்களுடைய ஆசிரியர் ஆயக்காரருடனேயும் பாவிகளுடனேயும் எதுக்காக அசனம்பண்ணுகிறாரென்று சொன்னார்கள் ஸ

௰௨. ஆனால் இயேசுநாதர் இதைக் கேட்டு வியாதியாயிருக்கிறவர்களுக்கல்லாமல் சுகமாயிருக்கிறவர்களுக்கு வயித்தியன் வேண்டியதில்லை ஸ

௰௩. நான் பலியின்பேரிலல்ல இரக்கத்தின்பேரில் பிரியமாயிருக்கிறேனென்கிறதின் அர்த்தமின்னதென்று நீங்கள் போய்ப் படியுங்கோ ஏதுமென்றால் நான் நீதிமான்களையல்ல பாவிகளை மனஸ்தாபத்துக்கு அழைக்கவந்தேனென்று அவர்களுக்குத் திருவுளம்பற்றினார் ஸ

௰௪. அப்பொழுது யோவானுடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து நாங்களும் பரிசேயர்களும் அநேகமுறை உபவாசமாயிருக்கிறதுக்கு உம்முடைய சீஷர்கள் உபவாசமாயிருக்கிறதில்லையென்று சொன்னார்கள் ஸ

௰௫. இயேசுநாதர் அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது மணவாளன் மணவாளனுடனேயிருக்குமா

www.WordOfGod.in

ருடனேயிருக்குமட்டும் அவர்கள் சலிப்பாயிருக்கக் கூடுமோ ஆனால் மணவாளன் அவர்களைவிட்டு எடுத்துக்கொள்ளப்படுகிற நாட்கள் வரும் அப்பொழுதவர்கள் உபவாசமாயிருப்பார்கள் ௵

௰௬. ஒருத்தரும் இம்பழைய உடுப்பிலே புதுச் சல்லாத்துண்டையிசைக்கமாட்டான் அதேதெனில் அதிலிசைக்கப்பட்ட துண்டை உடுப்பிலிருந்து கூட்டப்பிச்சுக்கொள்ளுமப்போ ஒழும் பெரிதாகும்.

௰௭. இன்னமும் பழைய துருத்திகளிலே புதிதான முந்திரிகைப்பானத்தை வார்க்கமாட்டார்கள் அப்படியானால் துருத்திகள் கிழிந்து முந்திரிகைப்பானமுஞ்சிந்தித் துருத்திகளும் உதவாதே போம் ஆனால் புதிதான முந்திரிகைப்பானத்தைப் புதுத் துருத்திகளில் வார்த்தால் அப்பொழுதிரண்டுங் கூட்டக் காக்கப்பட்டிருக்கும் ௵

௰௮. இந்தக் காரியங்களை அவர்களிடத்திலே அவர் பேசிக்கொண்டிருக்கிறபோது இதோ ஒருத்தனவன் வந்து அவரை வணங்கி என்னுடைய மகளிப்பொழுதான் மரித்தாள் ஆனாலும் நீர் வந்து அவள் பேரிலேக் கையை வையும் அப்போ அவள் பிழைப்பாளென்று சொன்னான் ௵

௰௯. இயேசுநாதரெழுந்திருந்து தமது சீஷர்களுங்கூட அவனுடனே போனார் ௵

௨௰. இதோ பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடுண்டாயிருந்த ஒரு ஸ்திரீ அவருக்குப் பின்னாலே வந்து அவருடைய உடுப்பின் விளிம்பைத் தொட்டாள் ௵

௨௰௧. ஏதென்னால் நான் அவருடைய உடுப்பை மாத்திரந்தொட்டேனாகில் அப்போ சுகப்படுவேனென்று தன்னுள்ளே தானே சொன்னாள் ௵

௨௰௨. இயேசுநாதர் திரும்பி அவளைப் பார்த்து மகளே நீ மகிழ்க்கையாயிரு உன்னுடைய விசுவாசமுன்னை ரட்சித்ததென்று திருவுளம்பற்றினார் அந்த நாழிகையிலே தானே அந்த ஸ்திரீயானவள் சுகப்பட்டாள் ௵

௨௰௩. இயேசுநாதர் அவனுடைய வீட்டிலே வந்தபோது தாரையூதுகிறவர்களையும் இரைகிற ஜனங்களையுங்கண்டு ௵

௨௰௪. அவர்களிடத்திலே நீங்கள் பாறிப்போங்கோ அதேதென்னால் சிறுபெண்பிள்ளை சாகவில்லை ஆனால் நித்திரை செய்கிறாளென்று அவர் திருவுளம்பற்றினார் அப்போ அவர்களவரை நகைத்தார்கள் ௵

௨௰௫. ஜனங்கள் வெளியிலே துரத்தப்பட்ட பின்பு அவருட்பிரவேசித்து அவளுடைய கையைப் பிடித்தார் அப்போ அந்தச் சிறுபெண்பிள்ளை எழுந்திருந்தாள் ௵

௨௰௬. இந்தக் கீர்த்தி அந்தத் தேசமுழுதும் பரம்பிச்சுது ௵

௨௰௭. இயேசுநாதரவ்விடம் விட்டு அப்பால் போறபோது இரண்டு குருடர் அவரைப் பின்பற்றித் தாவீதினுடைய குமாரனே நீர் எங்களுக்கிரங்குமென்று சத்தம் வைத்துச் சொன்னார்கள் ௵

௨௰௮. அவர் வீட்டுக்குள்ளே வந்தபோது அந்தக் குருடர் அவரிடத்திலே வந்தார்கள் இயேசுநாதர் அவர்களிடத்திலே நம்மாலேயிது செய்யக்கூடுமென்று நீங்கள் விசுவசிக்கிறீர்களோவென்று கேட்டார் அவர்களவருக்கு ஆம் ஆண்டவரேயென்று சொன்னார்கள் ௵

௨௰௯. அப்போ அவர்களுடைய கண்களை அவர் தொட்டு உங்களுடைய விசுவாசத்தின்படி உங்களுக்குச் சம்பவிக்கக்கடவதென்று திருவுளம்பற்றினார் ௵

௩௰. அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டுது அப்போ இயேசுநாதரிதையொருத்தரும் அறியாதபடிக்குப் பாருங்கோவென்று சொல்லி மெத்தவுங் கோபமாக அவர்களுக்கு விலக்குதல் பண்ணினார் ௵

௩௰௧. ஆனால் அவர்கள் புறப்பட்டுப் போய் அந்தத் தேசமுழுதும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள் ௵

௩௰௨. அவர்கள் புறப்பட்ட பின்பு இதோ பசாசு பிடித்து ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்திலே கொண்டுவந்தார்கள் ௵

௩௰௩. பசாசு அகற்றப்பட்ட பின்பு ஊமையாயிருந்தவன் பேசினான் ஜனங்கள் அதிசயித்து இத்தன்மையாக இஸ்ராயேலிக்குள்ளே ஒருக்காலுங் காணப்படவில்லையென்று சொன்னார்கள் ௵

௩௰௪. ஆனாற் பரிசேயர்களிவன் பசாசுகளினுடைய தலைவனைக்கொண்டு பசாசுகளை யகற்றிவிடுகிறானென்று சொன்னார்கள் ௵

௩௰௫. இயேசுநாதர் சகல பட்டணங்களிலேயுங் கிராமங்களிலேயுஞ் சுற்றித்திரிந்து அவர்களுடைய ஜெபக்கோவில்களிலே படிப்பித்து ராச்சியத்தினுடைய சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணி ஜனங்களுக்குள்ளே சகல வியாதிகளையுஞ் சகல நோ

www.WordOfGod.in

நோக்காடுகளையுஞ் சுகம்பண்ணினார் ௸

௩௰௬. அவர் ஜனங்களைக் கண்டு அவர்கள் இடையனில்லாத ஆடுகளைப்போலே தொய்ந்துபோனவர்களுமாய்ச் சிதறப்பட்டவர்களுமாயிருந்தபடியால் அவர்கள் பேரிலிரக்கமாக மனதுருகினார் ௸

௩௰௭. அப்பொ அவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து விளைச்சலோ மிகுதியாயிருக்குது ஆனாற்பிரயாசப்படுகிறவர்கள் கொஞ்சப்பேர்களாயிருக்கிறார்கள் ௸

௩௰௮. ஆகையால் விளைச்சலுக்குடைய ஆண்டவர் தம்முடைய விளைச்சலிலே பிரயாசப்படுகிறவர்களை அனுப்பும்படிக்கு வேண்டிக்கொள்ளுங்கோவென்று திருவுளம்பற்றினார் ௸

௰. அதிகாரம்.

௧: கிறிஸ்துநாதர் தம்முடைய அப்போஸ்தலர்மாருக்கு அதிசெயங்களைச் செய்யத்தக்க தத்துவங்கொடுத்ததும். ௨: அவர்களுடைய நாமங்களும். ௫: அவர்களை இஸ்றயேல் ஜெனங்களுக்குள்ளே பிரசங்கம்பண்ண அனுப்பினதும். ௯: பயணத்துக்குத் தங்களை எப்படிப் பாவிக்கவேணுமென்றும் தங்களை ஏற்றுக்கொள்ளுகிறவர்களிடத்திலும் போதகத்தைக் கொள்ளாதவர்களிடத்திலும் எப்படி நடந்துகொள்ளவேணுமென்றும். ௰௬: அவர்களுக்குண்டான இக்கட்டுவருத்தங்களுக்குமென்றும் அதல்லாதே இன்னும் அவர்கள் தங்களுக்குள்ளே கொண்டு ஆறுதல் வருத்தமென்றும் அவர்களுக்குப் படிப்பித்ததும். ௩௰௨: தம்மை ஜெனங்களுக்கு முன்பாக அறிக்கைபண்ணுகிறவர்களுக்கும் ௪௰: தம்முடைய சீஷர்களுக்கு உபகாரம்பண்ணுகிறவர்களுக்கும் என்னென்ன கூலி கிடைக்குமென்றும் படிப்பித்ததும் வருமாறு ௸

அப்பொ அவர் தம்முடைய சீஷர்களாகிய பன்னிரண்டுபேரையுந் தம்மிடத்திலே அழைத்து அசுத்தமான அரூபிகள்மேலே அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார் அதுகளைப் புறப்படப்பண்ணவும் சகல வியாதிகளையுஞ் சகல நோக்காடுகளையுஞ் சுகம்பண்ணவுந்தான் ௸

௨. பன்னிரண்டு அப்போஸ்தலர்மாருடைய நாமங்களாவது முந்தினவரான பேதுறு என்று சொல்லப்பட்ட சீமோனும் அவருடைய சகோதரனான அந்திரேயாவும் செபெதேயுக்குடைய மகனாகிய யாக்கோபும் அவருடைய சகோதரனான யோவானென்பவனும் ௸

௩. பிலிப்புவும் பற்தொலொமேயுந் தோமாசும் ஆயக்காரனான மத்தேயுவும் அல்பெயுக்குடைய மகனாகிய யாக்கோபும் ததேயுவென்று பேர்பெற்ற லெபெயுவும் ௸

௪. சீமோன் கானானீத்தேசும் அவருக்குச் சதிசெய்த யூதாஸ் இஸ்கரியோத்தேசுந்தான் ௸

௫. இவர்களைப் பன்னிரண்டுபேரையும் யேசுநாதர் அனுப்பி இவர்களுக்குக் கட்டளைகொடுத்துத் திருவுளம்பற்றினதாவது நீங்கள் அஞ்ஞானிகளுடைய வழியிலே போகாதேயுங்கோ சமாரித்தாருடைய யாதொரு நகரியிலேயும் உட்பிரவேசியாதேயுங்கோ ௸

௬. ஆனால் விசேஷமாக இஸ்றயேல் வீட்டினின்று தப்பிப்போன ஆடுகளிடத்துக்குப் போங்கோ.

௭. அப்படிப் போய் வானராச்சியஞ் சமீபமாய் வந்திருக்குதென்று சொல்லிப் பிரசங்கம்பண்ணுங்கோ.

௮. வியாதிக்காரருக்குச் சுகம்பண்ணுங்கோ குஷ்டரோகிகளைப் பரிசுத்தம்பண்ணுங்கோ மரித்தவர்களை எழுப்புங்கோ பசாசுகளைத் துரத்துங்கோ செலவில்லாமல் வாங்கினீர்கள் செலவில்லாமற் கொடுங்கோ ௸

௯. நீங்கள் உங்களுடைய இடைக்கட்டுகளிலே பொன்னையாகுதல் வெள்ளியையாகுதல் செம்புப்பணத்தையாகுதல் தேடிவையாதேயுங்கோ ௸

௰. வழிக்கு அடப்பப்பையையாகிலும் இரண்டு சட்டைகளையாகிலும் பாதரட்சைகளையாகிலுந் தடியையாகிலுங் கொண்டுபோகாதேயுங்கோ அதென்னென்றால் பிரயாசப்படுகிறவன் தன் போசனத்துக்குப் பாத்திரவானாயிருக்கிறான் ௸

௰௧. எந்த நகரியிலேயாகிலும் கிராமத்திலேயாகிலும் நீங்கள் பிரவேசிக்கும்போது அதிலே தகுதிபாத்திரவானாரென்று விசாரித்து நீங்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்படுமட்டும் அங்கே தரியுங்கோ ௸

௰௨. நீங்கள் ஒரு வீட்டிலே பிரவேசிக்கும்

போ

www.WordOfGod.in

போது அனுதமினவுங்கொ.

௰௩. அந்த வீடு பாத்திரமுள்ளதாயிருந்தால் உங்களுடைய சமாதானம் அதின் பேரிலே வரக்கடவது; அது பாத்திரமில்லாததாயிருந்தால் உங்களுடைய சமாதானம் உங்களிடத்திலே மறுபடி திரும்பக்கடவது.

௰௪. யாதொருத்தனும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் உங்களுடைய வசனங்களைக் கேளாமலும் இருந்தால் அந்த வீட்டை அல்லது அந்த நகரியை விட்டு உங்கள் காலிற் புழுதியைத் தட்டிப்போட்டுப் புறப்படுங்கோ.

௰௫. உண்மையாக நானுங்களுக்குச் சொல்லுகிறேன் நடுத்தீர்வைநாளிலே அந்த நகரியைப் பார்க்கச் சொதோமாவுங் கொமோறாவுமென்று சொல்லப்பட்ட தேசங்களுக்குப் பொறுக்கத்தக்கதாயிருக்கும்.

௰௬. இதோ நானுங்களை ஆடுகளைப்போலே ஓநாய்களுக்கிடையிலே யனுப்புகிறேன்; ஆகையால் சர்ப்பங்களைப்போலே வினாவுள்ளவர்களாகவும் புறாக்களைப்போலே நேர்மையுள்ளவர்களாகவுமிருங்கோ.

௰௭. ஆனால் மனுஷருக்கு உங்களைக் காத்துக்கொள்ளுங்கோ; அதேதென்றால் அவர்கள் ஆலோசனைச் சங்கங்களிலே உங்களையொப்புக்கொடுத்துத் தங்களுடைய சினகோகைகளிலே உங்களைக் கசையினாலேயடிப்பார்கள்.

௰௮. நீங்கள் நம்மக்காக வேண்டித் தேசாதிபதிகளிடத்திலேயும் ராசாக்களிடத்திலேயும் அவர்களுக்கும் அஞ்ஞானிகளுக்குஞ் சாட்சியாகக் கொண்டுபோகப்படுவீர்கள்.

௰௯. ஆகிலும் அவர்களுங்களையொப்புக்கொடுக்கிறபோது எப்படி அல்லது என்னத்தைப் பேசுவோமென்று கவலைப்படாதேயுங்கோ; அதேதென்றால் நீங்கள் பேசவேண்டியதின்னதென்று அந்த நாழிகையிலேதானே உங்களுக்குக் கொடுக்கப்படும்.

௨௰. அதேதென்றால் பேசுகிறது நீங்களல்ல, ஆனாலுங்களுக்குள்ளே பேசுகிறவர் உங்கள் பிதாவின் ஆவியானவர்தானே.

௨௰௧. ஒரு சகோதரன் மற்றச் சகோதரனையும் பிதாவானவன் பிள்ளையையும் மரணத்துக்கொப்புக்கொடுப்பான்; பிள்ளைகள் பிதாமாதாவுக்கு விரோதமாக எழும்பி அவர்களைக் கொலைப்படுத்துவார்கள்.

௨௰௨. நீங்கள் நம்முடைய நாமத்துக்காகச் சகலபேர்களாலேயும் நிந்திக்கப்படுவீர்கள்; ஆனால் முடிவுபரியந்தம் நிலைகொண்டிருப்பவனே இரட்சம்பெறுவான்.

௨௰௩. ஆனால் அவர்களுங்களை இந்தப் பட்டணத்திலே துன்பப்படுத்துகிறார்களானால் வேறே பட்டணத்துக்கு ஓடிப்போங்கோ; அதேதென்றால் உண்மையாக நானுங்களுக்குச் சொல்லுகிறேன் மனுஷகுமாரன் வருமட்டாக நீங்கள் இஸ்ரயேலுடைய நகரிகளைச் சுற்றி முடிக்கமாட்டார்கள்.

௨௰௪. சீஷன் குருவுக்கு மேலானவனல்லப் பணிவிடைக்காரன் தன் ஆண்டவனுக்கு மேலானவனல்ல.

௨௰௫. சீஷன் தன் குருவைப்போலவும் பணிவிடைக்காரன் தன் ஆண்டவனைப்போலவுமாகிறது போதும்; வீட்டெசமானனைப் பெயல்செபூலென்று பேரிட்டார்களானால் அவனுடைய வீட்டிலுள்ளவர்களை எத்தனைக்கதிகமாகப் பேரிடமாட்டார்கள்.

௨௰௬. ஆகையால் அவர்களுக்குப் பயப்படாதேயுங்கோ; அதேதென்றால் வெளியாக்கப்படாமல் மூடப்பட்டிருக்கிறதொன்றுமில்லை, அறியப்படாமல் மறைவாயிருக்கிறதொன்றுமில்லை.

௨௰௭. நானுங்களுக்கு இருட்டிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கோ; நீங்கள் காதிலே கேட்கிறதை மேல்தட்டுகளின் பேரிலே பிரசங்கியுங்கோ.

௨௰௮. ஆத்துமத்தைக் கொல்லக்கூடாமல் சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்குப் பயப்படாதேயுங்கோ; ஆனால் ஆத்துமத்தையுஞ் சரீரத்தையும் நரகத்திலே நாசப்பண்ணத்தக்கவருக்கு மிகவுமதிகமாகப் பயப்படுங்கோ.

௨௰௯. ஒரு சின்னக்காசுக்கு ரெண்டு அடைக்கலக்குருவிகள் விற்கப்படவில்லையோ; அதுகளிலொன்றாகிலும் உங்கள் பிதாவையன்றிப் பூமியிலே விழுகிறதில்லை.

௩௰. உங்கள் தலையிலே சகல ரோமங்களுந்தானும் எண்ணப்பட்டிருக்குது.

௩௰௧. ஆகையால் நீங்கள் பயப்படாதேயுங்கோ; அநேகம் அடைக்கலக்குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷமாயிருக்கிறீர்கள்.

௩௰௨. ஆகையால் யாதொருத்தன் மனுஷர் முன்

www.WordOfGod.in

ன்பேரமமைப்பிரத்திக்கினைபண்ணினால் வானங்களி
லேயிருக்கிற நமது பிதாவின் முன்பே நாமுமவனை
பிரத்திக்கினைபண்ணுவோம் ௵

௩௰௩. ஆனால் யாதொருத்தன் மனுஷர் முன்பே
நம்மை மறுதலித்தானாகில் வானங்களிலேயிருக்கி
ற நமது பிதாவின் முன்பே நாமுமவனை மறுதலிப்
போம் ௵

௩௰௪. பூமியிலே சமாதானத்தைக் கொண்டு
வாராமவந்தோமென்று நீங்கள் நினையாதையுங்
கோ சமாதானத்தையல்ல ஆயுதப்பட்டையத்தைக்
கொண்டுவாராமவந்தோம் ௵

௩௰௫. அதென்னென்றால் மனுஷனைத் தன்னு
டைய தகப்பனுக்கும் மகளைத் தன்னுடைய தாய
க்கும் மருமகளைத் தன்னுடைய மாமியாருக்கும் வி
ரோதமாகவே பிரித்துவந்தோம் ௵

௩௰௬. மனுஷனுடைய வீட்டிலுள்ளவர்கள்
தானே அவனுக்குச் சத்துராதியார்கள் ௵

௩௰௭. நம்மிலும் அதிகமாகப் பிதாவையாகிலு
ம் மாதாவையாகிலும் நேசிக்கிறவன் நமக்குப் பா
த்திரவானல்ல நம்மிலும் அதிகமாக மகனையாகிலும்
மகளையாகிலும் நேசிக்கிறவன் நமக்குப் பாத்திர
வானல்ல ௵

௩௰௮. தன்னுடைய குருசைத் தன்பேரிலே
யெடுத்துக்கொண்டு நம்மைப் பின்பற்றாதவன் நமக்
குப் பாத்திரவானல்ல ௵

௩௰௯. தன்னுடைய சீவனைக் கண்டுபிடிக்கிற
வன் அதை யிழந்துபோவான் நமக்காகவேண்
டித் தன்னுடைய சீவனையிழந்துவிட்டபோதோ அவன்
அதைக் கண்டுபிடிப்பான் ௵

௪௰. உங்களை யேற்றுக்கொள்ளுகிறவன் ந
ம்மையேற்றுக்கொள்ளுகிறான் நம்மையேற்றுக்
கொள்ளுகிறவன் நம்மை யனுப்பினவரையேற்றுக்
கொள்ளுகிறான் ௵

௪௰௧. ஒருதீர்க்கதரிசியுடையநாமத்திலே ஒரு
தீர்க்கதரிசியையேற்றுக்கொள்ளுகிறவன் ஒருதீர்
க்கதரிசியுடையபலனையேற்றுக்கொள்ளுவான்
ஒருநீதவானுடையநாமத்திலே ஒருநீதவானை
யேற்றுக்கொள்ளுகிறவன் ஒருநீதவானுடையபல
னையேற்றுக்கொள்ளுவான் ௵

௪௰௨. யாதொருத்தன் ஒருசீஷனுடையநா
மத்திலே இந்தச்சிறியவர்களிலொருத்தனுக்குக்
குளிர்ந்த தண்ணீர் மாத்திரங்குடிக்கக்
கொடுத்தானானால் அவனொருவிதத்திலுந்தன
னுடையபலனையிழந்துபோவதில்லையென்
று நாமுங்களுக்கு உண்மையாகச் சொல்லுகிறோ
மென்று திருவுளம்பற்றினார் ௵

௰௧. அதிகாரம்.

௧: இஸ்னைகளை யோவான்னெஸ் மறியலிலேயிரு
ந்துகொண்டு சீஷர்களைக் கிறிஸ்துநாதருடை
க்கு அனுப்பினதும். ௨: அவர்களுக்குக் கிறிஸ்
துநாதரானவர் தம்மைப்பார்த்துப்பண்ணப்பட்
டிருந்த மேசியாவென்று தம்முடைய படிப்பினையி
னாலுங்கிரிகைகளினாலும் ரூபிப்பித்ததும். ௭.
சனங்களுக்கு யோவான்னெஸ் பேரிலும் அவரு
டைய தொழிலின் பேரிலும் ஒரு பிரதாபமா
னசாட்சிகொடுத்ததும். ௰௬: யூதரையொரு
உபமையினாலே யவர்களுடைய வசப்பட்டமை
க்காகப் பழித்ததும். ௨௰: ஆகையால் கொரு
சினென்னப்பட்டணத்துக்கும் பெத்சாயிதா
வென்னப்பட்டணத்துக்குங் கப்பெர்னவுமெ
ன்னப்பட்டணத்துக்கும் மெத்தக்கனமான ஆ
யக்கினைகளுண்டாமென்று கடிந்துசொன்ன
தும். ௨௰௫: அதற்குமாருகச் சிறியோர்களைப்
போதிவிக்கிறதிலே தமது பிதாவின் பிரசாதத்
தைப் ஸ்தோத்திரித்ததும். ௨௰௮: தொய்வுள்ளசக
லபாவியளையுந்தம்மிடத்திலே வரவழைத்து அ
வர்களுக்கு இளைப்பாறுதலைவாக்குத்தத்தம்ப
ண்ணினதும் வருமாறு ௵

இயேசுநாதர் தமது பன்னிரண்டு சீஷ
ர்களுக்குங் கட்டளைகொடுத்து மு
டித்தபின்பு சமயத்திலேயாவது அவ்
விடம்விட்டு அப்பாலே அவர்க
ளுடையநகரிகளிலே படிப்பிக்கவும்
பிரசங்கம்பண்ணவும் போனார் ௵

௨. யோவான்னெஸ் சிறைச்சாலையிலிருக்கையி
லே கிறிஸ்துநாதருடைய கிரிகைகளைக்கேட்டுத்
தன்னுடைய சீஷர்களிலே ரெண்டுபேரையனுப்பி.

௩. வருவாரென்றிருந்தவர் நீரோ அல்லது வே
றொருத்தனாகக் காத்திருக்கிறோமோவென்று அ
வரிடத்திலேகேட்பித்தார் ௵

௪. இயேசுநாதரவர்களுக்குப் பிரத்தியுத்தர
மாகத் திருவுளம்பற்றினதாவது நீங்கள் கேட்கிற

www.WordOfGod.in

தையுங் காண்கிறதையு மறுபடி போய் யோவான
னுக்கு அறிவியுங்கோள்.

௫. குருடர்கள் பார்க்கிறார்கள் சப்பாணிகள் நட
க்கிறார்கள் குஷ்டரோகிகள் சுத்தியாக்கப்படுகி
றார்கள் செவிடர் கேட்கிறார்கள் மரித்தவர்கள் எ
ழுப்பப்படுகிறார்கள் எளியவர்களுக்குச் சுவிசேஷ
ம் பிரசங்கிக்கப்படுகுது.

௬. நம்மிலிடறுப்படாதவன் பாக்கியமுள்
ளவனென்று நிச்சயமாயறிந்திருங்கோள்.

௭. அவர்கள் போனபின்பு யேசுநாதர் ஜ
னங்களுக்கு யோவானைக் குறித்துச் சொல்லு
மபடிக்குத் தொடங்கினார் எதைப் பார்க்க வனா
ந்தரத்திலே போனீர்கள் காற்றினாலசைகிற நாண
லையோ.

௮. ஆனால் நீங்கள் எதைப் பார்க்கப் போனீர்
கள் மெல்லிய வஸ்திரந் தரித்திருக்கிற மனுஷ
னையோ இதோ மெல்லிய வஸ்திரந் தரித்திருக்
கிறவர்கள் ராசாக்களுடைய அரமனைகளி
லிருக்கிறார்கள்.

௯. ஆனால் நீங்கள் எதைப் பார்க்கப் போனீர்
கள் தீர்க்கதரிசியையோ ஆம் தீர்க்கதரிசியைப்
பார்க்கிலும் அதிகமானவனென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

௰. உனக்கு முன்னே உன் வழியைச் செவ்வை
யாக்கும்படிக்கு இதோ என் தூதனை உன் முகத்
துக்கு முன்பாக அனுப்புகிறேனென்று எழுதப்பட்டி
ருக்கிறது இவனைக் குறித்துத்தானே.

௰௧. உங்களுக்கு மெய்யாகச் சொல்லு
கிறேன் ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களுக்குள்
ளே ஸ்நானனாகிய யோவானைப் பார்க்கிலும் பெரி
யவனொருவனு மெழும்பினதில்லை ஆனாலும் பர
லோக ராச்சியத்திலே சின்னவனாயிருக்கிறவ
னவனைப் பார்க்கிலும் பெரியவனாயிருக்கிறான்.

௰௨. ஸ்நானனாகிய யோவானுடைய நா
ட்கள் முதற்கொண்டு இதுவரைக்கும் பரலோக
ராச்சியம் பலவந்தம் பண்ணப்படுகுது பலவந்தக்கார
ர் அதைப் பறித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩. சகல தீர்க்கதரிசிகளுஞ் சகலமும்
வேதப்பிரமாணமும் யோவான் மட்டுக்குந் தீர்க்
கதரிசனஞ் சொன்னார்கள்.

௰௪. நீங்கள் ஏற்றுக்கொள்ள மனதானாலுவரு
வானென்றிருந்த எலியா இவன்தான்.

௰௫. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்
கக்கடவன்.

௰௬. இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பா
க்குவேன் இது சந்தைவெளிகளில் உட்கார்ந்திருந்து
தங்கள் தோழரைக் கூப்பிட்டு நாங்கள் உங்க
ளுக்குக் குழலூதினோம் நீங்கள் கூத்தாடவி
ல்லை உங்களுக்காகப் புலம்பினோம் நீங்கள் மா
ரடித்துக்கொள்ளவில்லையென்று சொல்லுகிற பிள்ளைகளு
க்கு ஒப்பாயிருக்கிறது.

௰௭. அதெப்படியென்றால் யோவான் போ
ஜனம்பண்ணாமலும் குடியாமலும் வந்தான் அதற்கவர்
கள் அவன் பிசாசு பிடித்தவனென்று
சொல்லுகிறார்கள்.

௰௮. மனுஷகுமாரன் போஜனம்பண்ணிக்
கொண்டு குடித்துக்கொண்டு வந்தார் அதற்கவர்கள் இதோ
போஜனப்பிரியனும் மதுபானப்பிரியனுமாய் ஆயக்
காரருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனுமாயிருக்கிற
மனுஷனென்று சொல்லுகிறார்கள் ஆனா
லும் ஞானமானது தன் பிள்ளைகளாலே நீதியுள்ளதா
க்கப்படுகுது.

௨௰. அப்போது அவர் தமது அநேக
மான அற்புதங்கள் செய்யப்பட்டிருந்தும் மனந்தி
ரும்பாமல் போன பட்டணங்களைக் கடிந்துகொள்ளத்
தொடங்கினார்.

௨௰௧. ஐயோ கொராசீனே ஐயோ பெத்
சாயித்தாவே உங்களிடத்திலே செய்யப்பட்ட அற்புத
ங்கள் தீரிலும் சீதோனிலுஞ் செய்யப்பட்டிருந்தா
லவர்கள் வெகுநாளைக்கு முன்னமே இரட்டுடுத்திச்
சாம்பலிலுட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்
கள்.

௨௰௨. ஆனால் நியாயத்தீர்ப்பு நாளிலே
உங்களைப் பார்க்கிலும் தீருக்குஞ் சீதோனுக்கும்
நேரிடுவது இலகுவாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லு
கிறேன்.

௨௰௩. வானபரியந்த முயர்த்தப்பட்ட கப்பர
நகூமே நீ பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவாய்
உன்னிடத்திலே செய்யப்பட்ட அற்புதங்கள் சொதோ
மில் செய்யப்பட்டிருந்தால் அது இந்நாள்வரைக்கும்
நிலைநின்றிருக்கும்.

௨௰௪. ஆனாலும் நியாயத்தீர்ப்பு நாளிலே உன்னைப்
பார்க்கிலும் சொதோம் நாட்டுக்கு நேரிடுவது இலகுவா
யிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௰௫.

www.WordOfGod.in

௨௰௫. அந்தச்சமயத்திலே யேசுநாதர் பிரச ங்கித்தமாகத் திருவுளம்பற்றினதாவது: வானத்துக்கும் பூமிக்கும் உடையவராகிய பிதாவே, நீர் இந்தக் காரியங்களைப் புத்திமான்களுக்கும் அறிவாளிகளுக்கும் மறைத்து அவைகளைப் பாலகருக்குத் தெரியப்பண்ணினதுக்காக உம்மைக் கொண்டாடித் தோத்திரம் பண்ணுகிறேன் ௯

௨௰௬. ஆம் பிதாவே அப்படியே அப்படி உமக்கு இஷ்டமாயிருந்தது ௯

௨௰௭. என் பிதாவினாலே எல்லாச் சகல்காரியங்களும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்குது பிதாவல்லாமல் குமாரனை ஒருத்தனும் அறியான் குமாரனும் குமாரன் அவரைத் தெரியப்பண்ணச் சித்தமாயிருக்கிறவனுமல்லாமல் பிதாவை ஒருத்தனும் அறியான் ௯

௨௰௮. தொய்வுண்டானவர்களுமாய்ப் பாரஞ் சுமத்தப்பட்டவர்களுமாயிருக்கிறவர்களெல்லாரும் என்னிடத்திலே வாருங்கோள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் ௯

௨௰௯. நம்முடைய நுகத்தை உங்கள்மேலே யேற்றுக்கொள்ளுங்கோள் நான் மனத்தாழ்மையுள்ளவருமாய் இருதயத்திலே சாந்தமுள்ளவருமாயிருக்கிறபடியினாலே என்னிடத்திலே படியுங்கோள் அப்பொழுது உங்களுடைய ஆத்துமங்களுக்கு இளைப்பாறுதலைக் கண்டுபிடிப்பீர்கள் ௯

௩௰. ஆனதினாலே நம்முடைய நுகம் இனிமையானதும் நம்முடைய பாரம் இலேசானதுமாயிருக்குமென்று சொல்லியருளினார் ௯

௰௨. அதிகாரம்.

௧: அப்பொழுது தல்மாசபதநாளிலே கதிர்களைக் கொய்தபொழுது அவர்களுக்காக சந்தித்து உத்தாரவாதங்களைச் சொன்னதும். ௯: சூம்பின கையைச் சபதநாளிலே சொஸ்தமாக்கினதும் அவரைத் துரோகம் பண்ண எண்ணினதும். ௰௪: பரிசேயர்களுடைய தலைக்குத் தப்பிப் போய்ப் பலவிதமான நோய்களைக் குணமாக்கினதும். ௰௮: அந்த யேசாயா தீர்க்கதரிசியின் வசனத்தின்படி அவருடைய நிறைவேற்றினதும். ௨௰௨: குருடும் ஊமையுமாயிருந்த ஒருத்தனைச் சாத்தானின் கைக்கு விலக்கி ஆனவர்களுக்குப் பரிசுத்தமான ஆவியானவருக்கு விரோதமான தூஷணத்தைப் பாவமென்று காண்பித்ததும். ௩௰௩: மரத்தைக் கனியினாலே தெரியுமென்று காண்பித்து விரியன்பாம்புக் குட்டிகளைக் கண்டித்ததும். ௩௰௮: பரிசேயருக்கு யோனாவினுடைய அடையாளமல்லாமல் வேறே அடையாளம் கொடாததும். ௪௰௩: அவர்களுடைய அசுத்தமான ஆவிகளுடைய உபமையைக் காண்பித்து அவர்களுடைய காரியமென்னபடியாகுமென்றதும். ௪௰௬: தம்முடைய தாயையும் சகோதரரையும் மாதாவும் சகோதரருமென்றும் அப்படிப்பட்டதும் யெருசாலேமின் ௯

அந்தக்காலத்திலே யேசுநாதர் ஒரு சபதநாளிலே விளைந்த வயலின் வழியே போனபோது அவருடைய சீஷர்கள் பசியுண்டாயிருந்து கதிர்களைக் கொய்யத் துவக்கினார்கள் ௯

௨. பரிசேயர்கள் அதைக் கண்டு அவரிடத்திலே இதோ சபதநாளிலே செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்களென்று சொன்னார்கள் ௯

௩. அவர்களுக்கு அவர் திருவுளம்பற்றினதாவது தாவீது தானும் அவருடனே கூடவிருந்தவர்களும் பசியுண்டாயிருக்கும்போது அவன் செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையோ ௯

௪. அவன் தேவனுடைய வீட்டிலே பட்டு ஆசாரியர்மாத்திரமல்லாமல் தானும் அவனோடேகூட இருந்தவர்களும் தின்னத் தகாத சமுகத்து அப்பங்களைத் தின்றபடி ௯

௫. இன்னமும் ஓய்வுநாட்களிலே ஆசாரியர்மார் தேவாலயத்திலே சபதநாளை வசுத்தமாக்கினாலும் குற்றமில்லாமலிருக்கிறார்களென்று வேதத்திலே நீங்கள் வாசிக்கவில்லையோ ௯

௬. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தேவா

www.WordOfGod.in

லயத்திலும் பார்க்க அதிகமானவரொருத்தரிங்கேயி
ருக்கிறார் ௸

௭ ஆனால் நாம் பலியின் பேரிலேயல்ல இரக்
கத்தின் பேரிலே மனசாயிருக்கிறோம் என்பதையி
ன்னதென்று நீங்களறிந்தீர்களானால் குற்றமில்லா
தவர்களைத் தீர்வையிடமாட்டீர்கள் ௸

௮. ஆதென்னால் மனுமகன் சப்தநாளுக்
குங்கூட ஆண்டவராயிருக்கிறாரென்று திருவுள
ம்பற்றினார் ௸

௯. அவரவ்விடம்விட்டு அப்பாலேபோய் அ
வர்களுடைய சினகோகையிலே வந்தார் ௸

௰. இதோ கைசூம்பின ஒரு மனுஷன் அங்கே
யிருந்தான் அவர்களவரைக் குற்றப்படுத்தும்படி
க்குச் சப்த நாள்களிலே சுகம்பண்ணவு முறைமை
யோவென்று சொல்லி அவரிடத்திலே கேட்டார்
கள் ௸

௰௧. அவர்களுக்கவர் திருவுளம்பற்றினதாவது
தனக்கொரு ஆடுண்டாயிருந்து அது சப்த
நாளிலேயகளிலே விழுந்தால் அதைப்பிடி
த்துத் தூக்கி வெளியிலேவிடாத மனுஷன் உங்க
ளுக்குள்ளேயுண்டோ ௸

௰௨. ஒரு ஆட்டைப் பார்க்க ஒரு மனுஷன் எத்த
னைக்கு விசேஷமாயிருக்கிறான் ஆகையாற் சப்த
நாட்களிலே நன்மைசெய்ய முறைமைதான் ௸

௰௩. அப்போ அவரந்த மனுஷனைப் பார்த்து உ
ன்னுடைய கையை நீட்டென்று திருவுளம்பற்றி
னார் அவன் கையை நீட்டினான் அது மற்றக் கையை
ப்போலே சுகமாய்க் குணமாச்சுது ௸

௰௪. பரிசேயரெல்லாரும் வெளியிலே புறப்பட்டு இ
வரைக் கொல்லுகிறதெப்படியென்று இவருக்கெ
திரிடையாக ஆலோசனைபண்ணினார்கள் ௸

௰௫. ஆனால் யேசுநாதரதையறிந்து அவ்விட
த்தைவிட்டுப் புறப்பட்டார் அநேகம் ஜனங்க
ளவரைப் பின்பற்றினார்கள் அவர்களெல்லாரையும்
அவர் சுகம்பண்ணினார் ௸

௰௬. அப்போ அவர்கள் தம்மை வெளியரங்க
ம்பண்ணாதபடிக்குக் கடோரமாக அவர்களுக்குக்கட்
டளையிட்டார் ௸

௰௭. எதுக்கென்றால் தீர்க்கதரிசியாகிய யெ
சாயியாசைக்கொண்டு சொல்லப்பட்டிருந்தது நி
றைவேறும்படிக்குத்தான் அவர் சொன்னதாவ
து ௸

௰௮. இதோ நாம் தெரிந்துகொண்ட நம்முடைய
பணிவிடைக்காறனுமானவரும் நம்முடைய ஆத்துமம் பி
ரியமாவைத்திருக்கிற நம்ம நேசருமுள்ளவர் இவர் பே
ரிலே நாம் நம்முடைய அரூபியை வைப்போம் அ
வர் அஞ்ஞானிகளுக்குத் தீர்வையை நியப்பண்ணு
வார் ௸

௰௯. அவர் விரோதம்பண்ணவுமாட்டார் சத்
தம்வைக்கவுமாட்டார் அவருடைய சத்தத்தைத்
தெருக்களிலே ஒருத்தனுங் கேழ்க்கப்போற
துமில்லை ௸

௨௰. அவர் வெற்றிப்பாட்டுக்குத் தீர்வையைப்
பிறபலமாக்கும்மட்டும் நெரிந்த நாணலையவர் முறிக்
கப்போறதுமில்லைப் புகைகிற திரியைப்பவர் அறக்கப்
போறதுமில்லை ௸

௨௰௧. அவருடைய நாமத்தின் பேரிலே அஞ்ஞா
னிகள் நம்பிக்கையாகவாவு பார்த்திருப்பார்க
ளென்றதுதான் ௸

௨௰௨. அப்போ பசாசுபிடித்துக் குருடும் ஊ
மையுமான ஒருத்தனையவரிடத்திலே கொண்டுவ
ந்தார்கள் குருடும் ஊமையுமானவன் பேசும்படிக்
கும் பார்க்கும்படிக்கும் அவனைச் சுகம்பண்ணினார் ௸

௨௰௩. ஜனங்களெல்லாரும் அதிசயித்து இவர்
தாவீதினுடைய குமாரனல்லவோவென்று சொன்
னார்கள் ௸

௨௰௪. ஆனால் பரிசேயரிதைக் கேட்டு இ
வர் பசாசுகளுக்குத் தலைவனான பெயல்செபூலெ
ன்கிறவனாலே ஒழிய பசாசுகளையகற்றிவிடவில்லை
யென்று சொன்னார்கள் ௸

௨௰௫. ஆனால் யேசுநாதரவர்களுடைய நினை
வையறிந்து திருவுளம்பற்றினதாவது தனக்குத்தா
னே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற இராச்சியமெல்
லாம் பாழாய்ப் போம் தனக்குத்தானே விரோத
மாய்ப் பிரிந்திருக்கிற எந்த நகரியானாலும் வீடானா
லும் நிலைநிற்கமாட்டாது ௸

௨௰௬. சாத்தானே சாத்தானை அகற்றிவிட்டால்
அப்போ அது தனக்குத்தானே விரோதமாகப் பி
ரிவுபட்டிருக்குது ஆகையாலதினுடைய ராச்சிய
மெங்ஙனே நிற்குமெப்படி ௸

௨௰௭. நாம் பெயல்செபூலாலே பசாசுகளை
யகற்றிவிட்டால் உங்கள் புத்திரர்களாரைக்கொண்டு அ
துகளையகற்றிவிடுகிறார்கள் ஆகையாலவர்களுங்க
ளுடைய நடுவராயிருப்பார்கள் ௸

௨௰௮. ஆனால் நாம் சர்வேசுரனுடைய அ
ரூபியினாலே பசாசுகளையகற்றிவிட்டால் அப்
போ

www.WordOfGod.in

பொசறுவெஸ்பானுடைய இராச்சியமுங்களிடமாக வந்திருக்குது ௸

௨௰௯. அல்லது ஒருவன் பெலவானுடைய வீட்டிலெயாதொருத்தனுட்பட்டு முந்தி அந்தப் பெலவானைக் கட்டாமலவனுடைய வஸ்துக்களைக் கொள்ளையாடக்கூடுமெதெப்படி அவனைக் கட்டினால் அப்பொ அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான் ௸

௩௰. நம்மோடனெயிராதவன் நமக்கு விரோதமாயிருக்கிறான் நம்மோடனெ கூட்டம் பண்ணியையாதவன் சிதறிப்பொடுகிறான் ௸

௩௰௧. ஆகையால் நாமுங்களுக்குச் சொல்லுகிறொம் சகல பாவமுந் தூஷணமும் மனுஷருக்குப் பொறுக்கப்படும் ஆனால் அருபியானவருக்கெதிரிடையான தூஷணம் மனுஷருக்குப் பொறுக்கப்படுகிறதில்லை ௸

௩௰௨. எவனானும் மனுமகனுக்கெதிரிடையாக யாதொருவாக்கியத்தைப் பேசினாலும் அவனுக்கது பொறுக்கப்படும் ஆகிலும் யாதொருத்தன் பரிசுத்தமான அருபியானவருக்கெதிரிடையாகப் பேசினானாகில் அவனுக்கது இம்மையிலெயெனிலும் மறுமையிலெயெனிலும் பொறுக்கப்படுகிறதில்லை ௸

௩௰௩. ஒன்றில் மரத்தை நல்லதாகவும் அதின் கனியை நல்லதாகவும் பண்ணுங்கொ அல்லது மரத்தைப் பொல்லாததாகவும் அதின் கனியைப் பொல்லாததாகவும் பண்ணுங்கொ அதென்னென்றால் கனியினாலெ மரமறியப்படுகுது ௸

௩௰௪. விரியன் குட்டிகளெ நீங்கள் பொல்லாதவர்களாயிருக்கையிலெ நல்லகாரியங்களைப் பேசக்கூடுமெதெப்படி அதென்னென்றால் இருதயத்தினிறைவிருந்தெ வாய் பேசுகுது ௸

௩௰௫. நல்லமனுஷன் இருதயத்தின் நல்லபொக்கிஷத்திலிருந்தெ நல்லவஸ்துக்களைக் கொடுக்கிறான் பொல்லாதமனுஷன் பொல்லாதபொக்கிஷத்திலிருந்தெ பொல்லாதவஸ்துக்களைக் கொடுக்கிறான் ௸

௩௰௬. ஆனால் நாமுங்களுக்குச் சொல்லுகிறொம் மனுஷர் பேசும் ஒவ்வொரு வீணாயாத வார்த்தைக்குந் தீர்வைநாளிலெ கணக்குக் கொடுப்பார்கள் ௸

௩௰௭. அதென்னென்றால் நீயுன்னுடைய வார்த்தைகளினாலெ நீதிக்குப் பாத்திரமாகப்படுவாய் உன்னுடைய வார்த்தைகளினாலெ தீர்வையிடப்படுவாய் ௸

௩௰௮. அப்பொ ஆகமசாஸ்திரிகளிலெயும் பரிசெயுஸ்மாரிலெயுஞ் சிலர் பிரத்தியுத்தரமாக ஆசிரியனெ நாங்கள் உம்மாலெ ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறொமென்று சொன்னார்கள் ௸

௩௰௯. ஆனால் அவரவர்களுக்குப் பிரத்தியுத்தரமாகத் திருவுளம்பற்றினதாவது பொல்லாத விபசாரத்தினங்கிஷமொரு அடையாளத்தைக் கேட்குது இதுக்குத் தெரிசியாகிய யோனாசுடைய அடையாளமல்லாமல் வேறடையாளமவர்களுக்குக் கொடுக்கப்படப்போகிறதில்லை ௸

௪௰. அதென்னென்றால் யோனாஸ் மூன்று பகலும் மூன்றிராவும் திமிங்கிலத்தின் வயிற்றுக்குள்ளெ இருந்ததுபோலெ மனுமகனும் மூன்று பகலும் மூன்றிராவும் பூமியினிருதயத்துக்குள்ளெ யிருப்பார் ௸

௪௰௧. நீனிவையிலாட்டாவர்கள் நடுத்தீர்வையிலெ இந்த அங்கிஷத்துடனெ யெழும்பி இதைத் தீர்வையிடுவார்கள் அதென்னென்றால் அவர்கள் யோனாசுடைய பிரசங்கத்தின் பெரிலெ தவசப்பட்டுத் திருந்தினார்கள் இதொ யோனாசைப் பார்க்க அதிகமானவரிங்கெயிருக்கிறார் ௸

௪௰௨. தெக்ஷிணதிசையிலிராயஸ்திரீ நடுத்தீர்வையிலெ இந்த அங்கிஷத்துடனெ யெழும்பி இதைத் தீர்வையிடுவாள் அதென்னென்றால் அவள் சலொமொனுடைய ஞானத்தைக் கேட்கப் பூமியின் முடிவுகளிலெயிருந்து வந்தாள் இதொ சலொமொனைப் பார்க்க அதிகமானவரிங்கெயிருக்கிறார் ௸

௪௰௩. ஒரு அசுத்தமான அருபி மனுஷனை விட்டுப் புறப்பட்டபொது உலர்ந்த ஸ்தலங்களிலெ திரிந்து இளைப்பாறுதலைத் தேடியும் அதைக் கண்டுபிடித்ததில்லை ௸

௪௰௪. அப்பொ அது நானிருந்து புறப்பட்ட என்வீட்டுக்கு மறுபடி திரும்புவெனென்று சொல்லி வந்தபொது அது வெள்ளக்குமாறினாலெ பெருக்கிச் சொடிக்கப்பட்டு வெறுதாயிருக்கக் கண்டுது ௸

௪௰௫. அப்பொ அது போய்த் தனிலும் பாதகப்பொல்லாத வெழு அருபிகளைத் தன்னுடனெ கூட்டிக்கொண்டு அங்கெயுட்பிரவெசித்துக் குடியிருக்குது அந்த மனுஷனுடைய பிந்தின கருமம் முந்தினதிலும் பாதகக்கொடியதாயிருக்குது அந்தப் பொல்லாத அங்கிஷத்துக்கும் அந்தப்பிரகாரமாயிருக்கும் ௸

www.WordOfGod.in

௪௰௬ அவா செனஙகளுடனெ பினனமபெசுகிறபொது இதொ அவருடைய மாதாவுஞ செகொதாாகளும வெளியிலெ நினறு அவருடனெ பெசிககொளளத தெடினாாகள ௸

௪௰௭. அபபொ ஒருததனவரிடததிலெ இதொ உமமுடைய மாதாவும உமமுடைய செகொதாாகளும அஙகெ வெளியிலெ உமமிடததிலெ பெசிககொளளத தெடுகிறாாகளெனறு சொனனான ௸

௪௰௮. அதறகவா தமககு இதைச சொனனவனுககுப பிரதியுததரமாக எனனுடைய மாதா வாாெனன எனனுடைய செகொதாாகளாா ரெனறு சொலலி ௸

௪௰௯. தமமுடைய கையைத தமமுடைய சீஷாகளின பெரிலெ நீடடி இதொ நமமுடைய மாதாவும நமமுடைய செகொதாாகளும ௸

௫௰. ஆதெனனெனறால பரமணடலஙகளிலிருககிற நமமுடைய பிதாவானவருடைய சிததததினபடி செயகிறாவனெவனொ அவனதான நமமுடைய செகொதரனும செகொதரியும மாதாவுமெனறு திருவுளமபறறினாா ௸

௰௩. அதிகாரம.

௧: விதைககிறவனுடைய விததுப பலவிடஙகளிலெ விழுநத உபமானமும அதிலான பலவிதமான உபமானமாயககினனததாாதமகளுக கெபுலகொடுககிறயாககளுககுமிநததாபத தமும. ௰: தாமஉபமானஙகளாலெபசினதுககு முகாரணமெனனெனறதமதுசீஷாகளுககுப புரியாபபணணினதும. ௰௮: அநதஉபமானததை தமதுசீஷாககளுககு வியாததியாபபணணினதும. ௨௰௪: அததொடடெ கொதுமைபபயிாக கடடையிலெநெறறகளாயிருநதுடையவும. ௩௰௧: கடுகு மணியினுடையவும. ௩௰௩: புளிததமாவினுடையவுமுபமானததைசசொனனதும. ௩௰௯: நெறதுசனாயினுபமானததை வியாககியானம பணணினதும. ௪௰௪: அதுதடனெமறைககபபடட பொககிஷததினுடையவும. ௪௰௫: முததுசசெகிககிறவியாபாரியினுடையவும ௪௰௭: வலையினுடையவும. ௫௰௨: தனதுபொககிஷததிலிருநது புதியதையும பழையதையும கொ

டுககிற ஆகமசாஸதிரியினுடையவுபமானமையைச சொனனதும. ௫௰௩: தாமபெரியஅணணணிகளையாக எணணபபடாததமதனூருககு வநததுமவருமாறு ௸

அநநாளிலெ யெசுநாதா வீடடை விடடுபபொய சமுததிரககரையிலெ இருநதாா ௸

௨. அவரிடததிலெ அனெகஞ செனஙகளகூடினாாகள அதினாலெ அவா ஒரு படவிலெ எறியிருநதாா செனஙகளெலலாருங கடறகரையிலெ நினறாாகள ௸

௩. அபபொ அவா உபமானஙகளினாலெ அனெகங காரியஙகளை அவாகளிடததிலெ பெசித திருவுளமபறறினதாவது இதொ ஒருவெளளாணமைககாறன விதைககிறதுககுபபொனான ௸

௪. அவன விதைககிறபொது ஒருபஙகு விதை வழியருகெ விழுநதது பட்சிகளவநது அதைப பெறுககிபபொடடுது ௸

௫. மறறொருபஙகு மணமெததயிலலாதக கறறரையிலெ விழுநதது அஙகெ மணதாளவிலலாதபடியினாலெ உடனெ முளைததது ௸

௬. ஆனாலும சூரியனுதிததபொது சுடுபடடு வெருனறாததபடியினாலெ உலாநதுபொசசுது ௸

௭. மறறொருபஙகு முளளுககளுககுளளெ விழுநதது முளளுககளெளாநது அதைநெருககசசொணடுது ௸

௮. மறறொருபஙகு நலலநிலததிலெ விழுநது நூறு அறுபது முபபதாகவும பலனைக கொடுததது ௸

௯. கெடகிறதறகுக காதுளளவன கெடககககடவானெனறு திருவுளமபறறினாா ௸

௰. அபபொ சீஷாகளவரிடததிலெவநது நீா அவாகளொடெ உபமானஙகளினாலெ பெசுகிறதெனனெனறு கெடடாாகள ௸

௰௧. அவா அவாகளுககுப பிரதியுததரமாகத திருவுளமபறறினதாவது பரலொகராசசியததினுடைய இரகசியஙகளை அறிகிறதுககு உஙகளுககு அருளபபடடிருககிறது அவாகளுககொ அருளபபடாதிருககிறது ௸

௰௨. ஆதெனனெனறால உளளவனுககெவனுமிருக கு

www.WordOfGod.in

றானவனுக்குக்கொடுக்கப்படும் அவனுக்கு வெகுத்தமாக உண்டாயிருக்கும் ஆனாலில்லாதவனாயிருக்கிறவனிடத்தாலெ உள்ளதானதுமெடுத்துக்கொள்ளப்படும் ஸ

௰௩. ஆகையாலவர்கள் கண்டுங்காணாமலும் கெட்டுங்கேளாமலும் உணராமலுமிருக்கிறபடியால் நாமவர்களிடத்திலெ உபமானங்களினாலெ பெசுகிறோம் ஸ

௰௪. யெசாயியாசுடைய தீர்க்கதெரிசனமிவர்களிடத்திலெ நிறைவெற்றப்படுகுது அதாவது காதினாலெ கெட்பீர்கள் ஒருவிதத்தினாலுமறியமாட்டீர்கள் கண்டுபார்ப்பீர்கள் ஒருவிதத்தினாலும் மட்டுக்கட்டமாட்டீர்கள் ஸ

௰௫. ஏனென்றால் இந்தச்செனங்களுடைய இருதயந்தடிப்பாயிருந்து காதுகளினாலெ வருத்தமாய்க்கெட்டார்கள் ஒருசமையத்திலெ கண்களினாலெ காணாமலுங்காதுகளினாலெ கெழாமலும் இருதயத்தினாலெயறிந்து வசப்படாமலும் நாமவர்களைச்சுகம்பண்ணாமலுமிருக்கும்படிக்குத் தங்களுடைய கண்களை மூடிக்கொண்டார்களென்றுதான ஸ

௰௬. ஆனாலுங்களுடைய கண்கள் காணுகிறபடியினாலும் உங்களுடைய காதுகள் கெட்கிறபடியினாலும் அதுகள் பெற்றுள்ளதுகளாயிருக்குது ஸ

௰௭. அதெனென்றால் அனெகந்தீர்க்கதெரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காணுகிறகாரியங்களைக் காணவும் நீங்கள் கெட்கிறகாரியங்களைக் கெட்கவும் ஆசைப்பட்டிருந்தும் அதுகளைக் காணவுமில்லை கெட்கவுமில்லையென்று உண்மையாக நானுங்களுக்குச் சொல்லுகிறேன் ஸ

௰௮. ஆனால் நீங்கள் வெள்ளாண்மைக்காறனுடைய உபமானத்தைக் கெளுங்கொ ஸ

௰௯. யாதொருத்தனாகிலும் ராச்சியத்தின வசனத்தைக் கெட்டு அதையறியாமலிருந்தானாகில் அப்பொ பொல்லாதவன் வந்து அவனுடைய இருதயத்திலெ விதைக்கப்பட்டதைப் பிடுங்கிப்பொடுகிறான் வழியருகெ விதைக்கப்பட்டவனாகிறது இவன்தான ஸ

௨௰. ஆனாற்கற்றரையிலெ விதைக்கப்பட்டவனாகிறது வாக்கியத்தைக் கெட்டுடனெ அதைச் சந்தொஷத்துடனெ ஏற்றுக்கொள்ளுகிறவன்தான ஸ

௨௰௧. ஆகிலுந்தனக்குள்ளெ வெரில்லாததினாலெ கொஞ்சக்காலத்துக்குமாத்திரமிருக்கிறான் அந்தவாக்கியத்துக்காக வெணாடி நெருக்கமாவது துன்பமும் வந்தால் உடனெயிடறப்படுகிறான் ஸ

௨௰௨. முள்ளுகளுக்குள்ளெ விதைக்கப்பட்டவனாகிறது வாக்கியத்தைக் கெட்கிறவன்தான ஆனால் இந்த உலொகத்தின் கவலையும் திரவியத்தின் மயக்கமும் அந்தவாக்கியத்தை நெருக்கிக்கொள்ளுகிறதினாலெ அது பலன்கொடாமற்பொகுது ஸ

௨௰௩. நல்லநிலத்திலெ விதைக்கப்பட்டவனாகிறது வாக்கியத்தைக் கெட்டுமறிந்து பலனுண்டாய் ஒன்று நூறுமடங்காகவும் மற்றது அறுபதுமடங்காகவும் மற்றது முப்பதுமடங்காகவுங் கொடுக்கிறவன்தான ஸ

௨௰௪. அவர் வெறொரு உபமானத்தை அவர்களுக்கெடுத்துக்காட்டித் திருவுளம்பற்றினதாவது வானராச்சியந்தன்னுடைய வயலிலெ நல்லவித்தை விதைத்தொருமனுஷனுக்குச்சரியாயிருக்குது.

௨௰௫. ஆனால் மனுஷர் நித்திரைசெய்கிறபொது அவனுடைய சத்துராதி வந்து கொதுமைக்கிடையிலெ களைகளை விதைத்துப்பொட்டுப்பொனான் ஸ

௨௰௬. பயிர் வளர்ந்து பலன்கொடுக்கிறபொது களைகளும் வெளியாகக்காணப்பட்டுது ஸ

௨௰௭. அப்பொ வீட்டெசமானுடைய பணிவிடைக்காறர் அவனிடத்திற்பொய் ஆண்டவனெ நீருமது வயலிலெ நல்லவித்தை விதைக்கவில்லையொ அதிலெயிந்தக்களைகளெங்காலெ வந்ததென்று சொன்னார்கள் ஸ

௨௰௮. அவன் அவர்களுக்கொரு சத்துராதியான மனுஷன் இதைச்செய்தானென்று சொன்னான் அப்பொ பணிவிடைக்காறர் அவனிடத்திலெ நாங்கள் பொய் அதுகளைப் பிடுங்கிப்பொட உமக்கு மனசொவென்று கெட்டார்கள் ஸ

௨௰௯. அவனொவென்றால் வெண்டாம் நீங்கள் களைகளைப் பிடுங்குகிறபொது கொதுமையையும் அத்துடனெ கூடப்பிடுங்கிப்பொடாதபடிக்கு.

௩௰. அது ரெண்டுங்கூட அறுப்புமட்டும் வளரவிடுங்கொ அறுப்புக்காலத்திலெ சுட்டுப்பொடுகிறதுக்கு முந்தக்களையைப்பிடுங்கிக்கூட்டம்பண்ணிக்கட்டுக்களாகக்கட்டுங்கொவென்றும் பின்ன கொதுமையையென் களஞ்சியத்திலெ கொண்டுவாருங்கொவென்றும் அறுக்கிறவர்க

www.WordOfGod.in

டக்குச்சொல்லிவென்னவென்றுசொன்னான்று
திருவுளம்பற்றினார் ௲

௰௧. அவரவெரென்றுஉபமானத்தை அவர்க
ளுக்குச்சொல்லத்துவக்கினபடித்திருவுளம்பற்றினதாவது
வானராச்சியம் ஒருமனுஷன்கருச்சரியாயிருக்கு
அதைச்சொன்னவன்றைதன்னுடையவய
லிலேவிதைத்தான் ௲

௰௨. அதுஎல்லாவித்துகளிலேயுஞ்சிறிதா
யிருந்தாலும்வளர்ந்தபொழுதுபயிர்வகைகளிலும்பெ
ரியதாயிருந்துடைய சொப்புகளிலேஆகாசத்தி
ட்டபட்சிகள்வந்துகூடுகட்டும்படிக்கு மரமாகு
து ௲

௰௩. அவரவெரென்றுஉபமானத்தை அவ
ர்களிடத்திலேசொல்லித்திருவுளம்பற்றினதாவது வா
னராச்சியம்புளிச்சமாவுக்குச்சரியாயிருக்குது அ
தை ஒருஸ்திரீஎடுத்து மூன்றுபடிமாவிலே
கலந்துவைக்கிறது அதுமுழுதும்புளிக்குமட்டுந்தை
த்துவைத்தாளென்றுதிருவுளம்பற்றினார் ௲

௰௪. இதுகாரியங்களெல்லாம்யேசுநாதர
சனங்களிடத்திலேஉபமானங்களினாலேபேசி
னார் உபமானமில்லாமல் அவர்களிடத்திலே அவர்
பேசவில்லை ௲

௰௫. என்னுடைய வாயைஉப
மானங்களினாலேதிறப்பேன் உலகத்
தின் அஸ்திவாரம்போடப்பட்டது முதல் மறை
வாயிருந்தகாரியங்களைநான்வெளிப்படுத்துவே
னென்று தீர்க்கதரிசியால் சொல்லப்பட்
டிருந்ததுநிறைவேறும்படிக்குநடந்தது ௲

௰௬. அப்பொழுதுயேசுநாதர்சனங்களை வி
ட்டுப்போய்வீட்டுக்குப்போனார் அவருடை
ய சீஷர்கள் அவரிடத்திலே வந்து வயலிலுள்ள களைக
ளினுடையஉபமானத்தைஎங்களுக்குவிவரியா
யிருக்கவேணுமென்றுசொன்னார்கள் ௲

௰௭. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக
த்திருவுளம்பற்றினதாவது நல்லவிதையைவிதைக்கி
றவர் மனுஷகுமாரன்தான் ௲

௰௮. வயலோ இந்தஉலகந்தான் நல்லவித
தோ ராச்சியத்தின்பிள்ளைகள்தான் களைகளோ
பொல்லாதவனுடையமக்கள்தான் ௲

௰௯. அதைவிதைத்த சத்துராதியோ பிசா
சுதான் அறுப்போ உலகத்தின்
முடிவுதான் அறுக்கிறவர்களோ தேவதூத
ர்கள்தான் ௲

௪௰. ஆதலால் களைகள்கூட்டி வைக்கப்பட்டு
அக்கினியிலேசுட்டெரிக்கப்படுகிறது அது
போல இந்தஉலகத்தின்முடிவிலேயும் நடக்கப்பி
போகிறதாயிருக்கும் ௲

௪௧. மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவா
ர் அவர்கள் அவருடையராச்சியத்திலிருந்து இடறல்
களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையும் கூட்டிச்சே
ர்த்து ௲

௪௨. அவர்களை அக்கினிச்சூளையிலே போடு
வார்கள் அங்கே அழுகையும் பல் கடிப்பும் உ
ண்டாயிருக்கும் ௲

௪௩. அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவா
னவருடைய ராச்சியத்திலே சூரியனைப்போல
பிரகாசிப்பார்கள் கேட்கிறதற்குக் காதுள்ளவ
ன் கேட்கக்கடவான் ௲

௪௪. மறுபடியும் வானராச்சியம் வயலிலே
புதைத்து வைக்கப்பட்டபொக்கிஷத்துக்குச்சரி
யாயிருக்குது அதை ஒரு மனுஷன் கண்டெடுத்து
அதைமறைத்துவைத்து அதினிமித்தம்சந்
தோஷித்து போய்த் தனக்குள்ளதெல்லாத்
தையும் விற்று அந்த வயலைக் கொள்ளுகிறான் ௲

௪௫. மறுபடியும் வானராச்சியம் நல்ல முத்
துக்களைத்தேடுகிற ஒருவியாபாரிக்குச்சரியாயிரு
க்குது ௲

௪௬. அவன் விலையுயர்ந்த ஒருமுத்தைக
கண்டவுடனே போய்த் தனக்குண்டானதெல்லா
த்தையும் விற்று அதைக்கொண்டான் ௲

௪௭. மறுபடியும் வானராச்சியம் சமுத்திர
த்திலே போடப்பட்டு சகலவிதமான மீன்க
ளையும் சேர்க்கிற ஒருவலைக்குச்சரியாயிரு
க்குது ௲

௪௮. அது நிறைந்தவுடனே மீன் பிடிக்காற
ர்கள் அதைக் கரைக்கு இழுத்துக்கொண்டு உட்கார்ந்து நல்ல
வைகளைக் கூடைகளிலே சேர்த்து ஆகாதவை
களை எறிந்துபோடுகிறார்கள்.

௪௯. உலகமுடிவிலேயும் இப்படித்தானாயி
ருக்கும் தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களுக்கி
டையிலே பொல்லாதவர்களைப்பிரித்து ௲

௫௰. அவர்களை அக்கினிச்சூளையிலே போடு
வார்கள் அங்கே அழுகையும் பல் கடிப்பும் உ
ண்டாயிருக்கும் ௲

௫௧. இதெல்லாத்தையும் அறிந்தீர்களா
வென்று யேசுநாதர் அவர்களிடத்திலே கேட்டார்

www.WordOfGod.in

ராம் ஆண்டவரே யென்று அவர்கள் அவருக்குச் சொன்னார்கள் ஸ

௫௰௨. ஆகையால் வானராச்சியத்துக்கென்று படிப்பிக்கப்பட்டவனெவனோ அவன் ஆகமசாஸ்திரியானவன் தன்னுடைய பொக்கிஷத்திலே புதியதும் பழையதுமான வஸ்துக்களைக் கொடுக்கிற ஒரு வீட்டெசமானுக்குச் சரியாயிருக்கிறானென்று அவர்களுக்குத் திருவுளம்பற்றினார் ஸ

௫௰௩. இயேசுநாதர் இந்த உபமானங்களை முடித்தபின்பு சம்பவித்ததாவது அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு ஸ

௫௰௪. தாமவளர்ந்த தேசத்திலே வந்து அவர்களுடைய சினகோகையிலே அவர்களைப் படிப்பித்தார் ஆகையால் அவர்கள் ஆச்சரியப்பட்டுச் சொன்னதாவது இவருக்கிந்த ஞானமும் வல்லமைகளும் எங்கேயிருந்து ஸ

௫௰௫. இவர் தச்சனுடைய குமாரனல்லவோ இவருடைய மாதா மரியாளென்று பேர்பெற்றவளல்லவோ இவருடைய சகோதரர்கள் யாக்கோபும் யோசேப்பும் சீமோனும் யூதாசுமல்லவோ ஸ

௫௰௬. இவருடைய சகோதரிகளெல்லாருமே நம்மிடத்திலேயிருக்கிறார்களல்லவோ இவருக்கு இதெல்லாமெங்கேயிருந்தென்று சொல்லி.

௫௰௭. அவர்பேரில் இடறல்பட்டார்கள் ஆனால் இயேசுநாதர் அவர்களை நோக்கி தீர்க்கதரிசியானவன் தன் சொந்தப் பட்டணத்திலும் தன் வீட்டிலுமல்லாதே அசங்கைப்பட்டிருக்கவில்லையென்று திருவுளம்பற்றினார் ஸ

௫௰௮. அதல்லாமல் அவர்களுடைய அவிசுவாசத்துக்காக அவ்விடத்திலே அவர் அநேகம் வல்லமைகளைச் செய்யவில்லை ஸ

௰௪. அதிகாரம்.

௧: கிறிஸ்துநாதர் பேரிலே ஏரோதேசு கொண்டிருந்த எண்ணம். ௩: ஸ்நானகனாகிய யோவானுடைய பாடுகளும் மரணமும் ஏரோதியாளுடைய மகள் கேட்ட மன்றாட்டினாலே அவருடைய தலை வெட்டப்பட்டதும். ௰௩: கிறிஸ்துநாதர் ஐயாயிரம் பேருக்கு அஞ்சப்பங்களாலும் இரண்டு மீன்களாலும் பசியாற்றினதும். ௨௰௨: சமுத்திரத்துமேலே அவர் நடந்ததும் சீஷர்களிடத்திலே வர அதின் ஜலத்தின் பேரிலே உலாவினதும். ௨௰௮: அவருடைய கட்டளையின் பேரிலே பேதுரு ஜலத்தின் பேரிலே உலாவிக் கரைக்குப் பயந்தாழ்ந்து போகப் போகையில் கிறிஸ்துநாதரால் ரட்சிக்கப்பட்டதும். ௩௰௨: அவர் அக்கொந்தளிப்பை அமர்த்தியதினாலே சீஷர்களாலே தேவனுடைய குமாரனென்று அறிந்துகொள்ளப்பட்டதும். ௩௰௪: கெனேசரேத்து நாட்டிலே அப்படியே அநேகம் நோயாளிகளைக் குணமாக்கினதும் வருமாறு ஸ

அக்காலத்திலே நாலிலொரு பங்குக்கு அதிபதியாகிய ஏரோதேசென்கிறவன் இயேசுநாதருடைய கீர்த்தியைக் கேட்டு ஸ

௨. இந்த ஸ்நானகனாகிய யோவானானவனே அவர் தானே மரித்தவர்களிடத்திலே நின்றெழுப்பப்பட்டார் ஆகையால் இவருக்குள்ளே இந்த வல்லமைகள் முயற்சியாயிருக்குமென்று தன்னுடைய பணிவிடைக்காரருக்குச் சொன்னான் ஸ

௩. அதென்னவென்றால் ஏரோதேசென்கிறவன் தன் சகோதரனாகிய பிலிப்புவுடைய பெண்சாதியான ஏரோதியாளென்பவளுக்காக யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலிலே வைத்தான் ஸ

௪. ஏனென்றால் நீர் அவளை வைத்துக்கொண்டிருக்கிறது உமக்கு முறைமையல்லவென்று யோவானென்பவன் அவனுக்குச் சொன்னார் ஸ

௫. அவனைக் கொல்லவென்று மனசாயிருந்தபோது ஜனங்கள் அவரை ஒரு தீர்க்கதரிசியாக எண்ணியிருந்தபடியால் அவர்களுக்குப் பயந்தான்.

௬. ஆனாலும் ஏரோதேசுடைய பிறந்த நாள் கொண்டாடப்பட்டபோது ஏரோதியாளென்பவளுடைய குமாரத்தி அவர்களுக்கு நடுவே கூத்தாடினாள் ஏரோதேசைச் சந்தோஷப்படுத்தினாள் ஸ

௭. அதற்காக அவள் எதைக் கேட்டாலும் தருவேனென்று அவன் அவளுக்குச் சத்தியமாக வாக்குத்தத்தம் பண்ணிக்கொடுத்தான் ஸ

௮. அவள் தன்னுடைய மாதாவாலே ஏவப்பட்டிருந்தபடிக்கு ஸ்நானகனாகிய யோவானுடைய தலையை ஒரு தட்டிலே இங்கே எனக்குத் தாருமென்று கேட்டாள்.

௯. அப்பொழுது ராசா சஞ்சலத்துக்குள்ளானா

ன்

www.WordOfGod.in

கிறுஞ் சத்தியங்களுக்காகவும் தம்மோடே கூட அசனத்துக்கிருந்தவர்களுக்காகவும் அவளுக்கு அதைக் கொடுக்கும்படிக்குக் கட்டளைபண்ணினான் ௯

௰. ஆகையால் ஆளனுப்பிச் சிறைச்சாலையிலே யோவானென்கிறவனுடைய தலையை வெட்டுவித்தான்.

௰௧. அவனுடைய தலை ஒரு தட்டத்திலே கொண்டுவந்து அந்தச் சிறுமிக்குக் கொடுக்கப்பட்டது அவள் அதைத் தன்னுடைய தாயினிடத்தில் கொண்டுபோனாள் ௯

௰௨. அவருடைய சீஷர்கள் வந்து அந்த உடலையெடுத்து அடக்கம்பண்ணிப்போட்டுப் போய் இதை இயேசுநாதருக்கு அறியப்பண்ணினார்கள் ௯

௰௩. இயேசுநாதர் அதைக் கேட்டு அவ்விடம்விட்டுப் படவிலேயேறி வனாந்திரமான ஒருத்தத்துக்குத் தனியே போனார் சனங்கள் அதைக் கேட்டுப் பட்டணங்களிலேயிருந்து கால்நடையாக அவரைப் பின்பற்றினார்கள் ௯

௰௪. இயேசுநாதர் புறப்பட்டபோது திரளான சனத்தைக் கண்டு அவர்கள் மேலே மிகக் மனதுருகி அவர்களில் வியாதியாயிருக்கிறபேர்களைச் சுகம்பண்ணினார் ௯

௰௫. சாயுங்காலமானபோது அவருடைய சீஷர்கள் அவரிடமாக வந்து இந்த இடம் வனாந்திரமாயிருக்குது நேரமுஞ் சென்றுபோச்சுது சனங்கள் கிராமங்களிலே போய்த் தங்களுக்குத் தீனங்களைக் கொள்ளும்படிக்கு உம்மிடத்தாமல் அவர்களையனுப்பிவிடுமென்று சொன்னார்கள் ௯

௰௬. ஆனால் இயேசுநாதர் அவர்கள் போகத்தேவையில்லை நீங்கள் அவர்களுக்குப் போசனங் கொடுங்கோளென்று அவர்களுக்குத் திருவுளம்பற்றினார்.

௰௭. அப்போ அவர்கள் அஞ்சு அப்பமும் இரண்டு மீனுமல்லாமதே இங்கே எங்களிடத்திலே வேறொன்றுமில்லையென்று அவருக்குச் சொன்னார்கள் ௯

௰௮. ஆனால் அவர் அதுகளை இங்கே என்னிடத்திலே கொண்டுவாருங்கோளென்று திருவுளம்பற்றினார் ௯

௰௯. அப்போ அவர் சனங்களைப் பணியப் புல்லின் மேலேயிருக்கக் கற்பித்து அஞ்சப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தைப் பார்த்து அதுகளை ஆசீர்வதித்தபின்பு அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்தார் சீஷர்கள் சனங்களுக்குக் கொடுத்தார்கள் ௯

௨௰. அவர்களெல்லாரும் போசனம்பண்ணிச் சம்பூரணமாகி மிஞ்சின துண்டங்களைப் பன்னிரண்டு கூடைகளிலே எடுத்தார்கள் ௯

௨௰௧. அப்போ போசனம்பண்ணின பேர்கள் ஸ்திரீகளும் பிள்ளைகளுமல்லாமல் ஆடவர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேர்களாயிருந்தார்கள்.

௨௰௨. இயேசுநாதர் தாம் சனங்களையனுப்பிவிடுகிறதுக்குள்ளாக உடனே தானே தம்முடைய சீஷர்களைப் படவிலேயேறித் தமக்கு முன்னே அக்கரைக்குப் போகவும் வருந்தம்பண்ணினார் ௯

௨௰௩. அவர் சனங்களைத் தம்மைவிட்டு அப்பாலனுப்பினபின்பு ஜெபம்பண்ணிக்கொள்ளத் தனித்து மலையின்மேலேறினார் அஸ்தமனமான பிறகு அங்கே தனித்திருந்தார் ௯

௨௰௪. அப்போ படவு நடுச்சமுத்திரத்திலே யிருந்து அலைகளினாலே அலைவுபட்டுது ஏதென்றால் அவர்களுக்கு எதிர்க்காற்றாயிருந்துது.

௨௰௫. ஆனால் இராவிலே நாலாஞ்சாமத்திலே இயேசுநாதர் சமுத்திரத்தின்மேலே நடந்து அவர்களிடமாக வந்தார் ௯

௨௰௬. அவர் சமுத்திரத்தின்மேலே நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு தத்தளித்து இது ஒரு ஆவேசமென்று சொல்லிப் பயங்கரத்தினாலே சத்தமிட்டார்கள் ௯

௨௰௭. ஆனால் உடனே தானே இயேசுநாதர் அவர்களிடத்திலே பேசி மனதிடங்கொண்டிருங்கோள் நான்தானே பயப்படாதேயுங்கோளென்று திருவுளம்பற்றினார் ௯

௨௰௮. அப்போ பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே நீர்தானேயானால் தண்ணீரின்மேலே நான் உம்மிடமாக வருகிறதுக்குக் கற்பியுமென்று சொன்னான் ௯

௨௰௯. அவர் வாவென்று திருவுளம்பற்றினார் அப்போ பேதுரு படவிலேயிருந்திறங்கி இயேசுநாதரிடமாக வருகிறதுக்குத் தண்ணீரின்மேலே நடந்தான் ௯

௩௰. ஆனாலும் காற்றைக் கண்டு அவன் பயந்து தாழ்ந்துபோகத் துடங்குகிறபோது ஆண்டவரே யென்னை இரட்சித்துக்கொள்ளுமென்று சொல்லிக் கூப்பிட்டான் ௯

௩௰௧. உடனே இயேசுநாதர் கையை நீட்டி அவனைப் பிடித்துக்கொண்டு அற்பவிசுவாசமுள்ள

www.WordOfGod.in

வனைத் தூக்கிக் கீழ்மழுமியென்று அவனுக்குத் திருவுளம்பற்றினார்.

௩௰௨. அவர்கள் படவிலேயேறின பின்பு காற்றமர்ந்தது.

௩௰௩. அப்போ படவிலேயிருந்தவர்கள் வந்து அவரை வணங்கி மெய்யாகவே நீர் சர்வேசுரனுடைய குமாரனாயிருக்கிறீரென்று சொன்னார்கள்.

௩௰௪. அவர்கள் கரைக்கு ஏறி யாத்திரைபண்ணிக் கெனேசரேத்தென்னுந் தேசத்துக்கு வந்தார்கள்.

௩௰௫. அந்தத் தலத்திலுள்ளவர்கள் அவரை அறிந்தபோது அந்தத் தேசத்திலெங்கும் அப்படிக்கொத்த ஆளனுப்பி வியாதியாயிருக்கிறவர்களெல்லாரையும் அவரிடமாகக் கொண்டுவந்து

௩௰௬. அவருடைய உடுப்பின் விளிம்பை மாத்திரமாயாகிலுந் தொடும்படிக்கு அவரை மன்றாடினார்கள் அதைத் தொட்டவர்களெல்லாரும் சுகமானார்கள்.

௰௫. அதிகாரம்.

௧. கிறிஸ்துநாதருடைய சீஷர்கள் கழுவாத கைகளோடே சம்மபண்ணப்படியினாலேயாகம சாஸ்திரிமாரெல்லாம் பரிசேயுஸ்தாரெல்லாங் குற்றப்படுத்தப்பட்டபோது அவர்களுக்குக் கிறிஸ்துநாதர் அருளிச்செய்தது இவர்களுடைய கட்டளைகளைக் கடந்து இவர்களுடைய தப்பிதங்களைக் கண்டித்துப் போட்டதும். ௰: ஈயாவளம் காணட்டி அதலே காரியமில்லையென்றும் அழுக்குள்ளமையாக ஆயசுத்தம் பண்ணுகிறதென்றும் படிப்பித்ததும். ௨௰௨: ஒரு கானானேயஸ்திரீயுடைய மகளிடத்தாலே பசாசையகற்றினதும். ௩௰: பல்விதமான துன்பப்பட்டவர்களைச் சொஸ்தமாக்குணமாக்கினதும். ௩௰௨: ஏழு அப்பங்களையுங் கொஞ்சம் மீன்களையுங் கொண்டு நாலாயிரமாட்டவர்க்குத் திருப்தியடையப்பண்ணினதும் வருமாம்.

அப்போ யெருசலேமிலிருந்து வந்த சில ஆகமசாஸ்திரிகளும் பரிசேயருமானவர்கள் அவரிடத்திலே வந்து.

௨. உம்முடைய சீஷர்கள் முன்னோர்களுடைய கட்டளையை மீறுவானேனென்று அவர்கள் அப்பஞ்சாப்பிடுகிறபோது தங்களுடைய கைகளைக் கழுவுகிறதில்லையே யென்று சொன்னார்கள்.

௩. அதற்கவர் பிரதியுத்தரமாகத் திருவுளம்பற்றினதாவது நீங்களும் உங்களுடைய கட்டளையினாலே சர்வேசுரனுடைய கற்பனையை மீறுவானேன்.

௪. சர்வேசுரன் உன்னுடைய பிதாவையும் மாதாவையுங் கனம்பண்ணுவாயாகவென்றும் பிதாவையாவது மாதாவையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படக்கடவானென்றுஞ் சர்வேசுரன் கற்பித்துத் திருவுளம்பற்றியிருக்குது.

௫. ஆனாலொருத்தன் தன்னுடைய பிதாவை அல்லது மாதாவைச் சங்கியாமல் உமக்கு என்னாலே யாதொன்று பலனாகக்கூடியதுவெதுமானமாயிருக்குமதனை என் பிதாவினிடத்திலேயல்லது மாதாவினிடத்திலே சொல்லுவானாகில் அவன் செய்கிறது போதுமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.

௬. அப்படியே நீங்கள் உங்களுடைய கட்டளையினாலே சர்வேசுரனுடைய கற்பனையைத் தள்ளிப்போடுகிறீர்கள்.

௭. கபடர்களே உங்களைக் கொண்டு இசாயியாசு நன்றாகத் தீர்க்கதரிசனஞ் சொன்னதாவது

௮. இந்த ஜனங்கள் தங்களுடைய வாயினாலே என்னிடத்தில் நெருங்கி உதடுகளினாலே என்னைச் சங்கிக்கிறார்கள் ஆனால் அவர்களுடைய இருதயம் எனக்குத் தூரமாயிருக்குது.

௯. ஆனால் மனுஷருடைய கற்பனைகளாயிருக்கிறபடிப்பினைகளைப் படிப்பித்து நம்மை வீணாகச் சங்கிக்கிறார்களென்றது தான்.

௰. அப்போ அவர் ஜனங்களைத் தம்மிடத்திலே அழைத்து அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது நீங்கள் கேளுங்கோ அறியுங்கோ.

௰௧. வாயிலேயுட்படுகிறது மனுஷனைப் பவுத்திரயீனம்பண்ணுகிறதில்லை ஆனால் வாயிலே நின்று புறப்படுகிறது மனுஷனைப் பவுத்திரயீனமாக்குகுதென்று திருவுளம்பற்றினார்.

www.WordOfGod.in

௰௨. அப்பொ அவருடைய சீஷர்களவரிடமாக வந்து பரிசேயர்மாரிந்த வார்த்தையைக் கேட்டு இடறல்பட்டதை நீர் அறிவீரோவென்று அவரிடத்திலே கேட்டார்கள் ஸ

௰௩. ஆனால் அவர் பிரதியுத்தரமாக நமது வானபிதாவானவர் நடாத நாற்றெல்லாம் வேருடனே பிடுங்கப்படும் ஸ

௰௪. அவர்களை போகட்டும் அவர்கள் குருடருக்கு வழிகாண்பிக்கிற குருடராயிருக்கிறார்கள் ஆனால் குருடன் குருடனுக்கு வழிகாண்பித்தால் இருவரும் குழியிலே விழுவார்களென்று திருவுளம்பற்றினார் ஸ

௰௫. அதற்குப் பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக இந்த உபமானத்தை எங்களுக்கு வெளியாக்குமென்று அவரிடத்திலே சொன்னான் ஸ

௰௬. ஆனால் யேசுநாதர் திருவுளம்பற்றினதாவது நீங்களுந்தானின்னம் அறிவில்லாதவர்களாயிருக்கிறீர்களோ ஸ

௰௭. வாயிலே உட்படுகிறதெல்லாம் வயிற்றிலே சென்று சலக்கமனையிலே தள்ளப்பட்டுப் போகுமென்று நீங்களின்னம் அறியீர்களோ ஸ

௰௮. ஆனால் வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து வருகுது அதுகள் தாமே மனுஷனைப் பவித்திரஹீனமாக்குது ஸ

௰௯. அதெப்படியென்றால் பொல்லாத நினைவுகளும் கொலைபாதகங்களும் விபசாரங்களும் வேசித்தனங்களும் களவுகளும் பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் இருதயத்திலிருந்து புறப்படுகுது ஸ

௨௰. இதுகள் தானே மனுஷனைப் பவித்திரஹீனமாக்குது கழுவாதிருக்கிற கைகளோடே போசனம் பண்ணுகிறது மனுஷனைப் பவித்திரஹீனமாக்குகிறதில்லையென்று திருவுளம்பற்றினார் ஸ

௨௰௧. அப்பொ யேசுநாதர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தீருஞ் சீதோனுமென்னும் பட்டணங்களின் பக்கங்களுக்குப் போனார் ஸ

௨௰௨. இதோ கானானேய ஸ்திரீயானவள் அந்த எல்லைகளிலிருந்து வந்து அவரைப் பார்த்து ஆண்டவரே தாவீதுடைய குமாரனே என்பேரிலே இரக்கமாயிரும் என்னுடைய மகள் கோரமாகப் பசாசினாலே பிடிக்கப்பட்டிருக்கிறாளென்று சொல்லி அபயமிட்டாள் ஸ

௨௰௩. ஆனால் அவர் அவளுக்கு ஒரு வார்த்தையாகிலும் பிரதியுத்தரஞ் சொல்லவில்லை அப்பொ அவருடைய சீஷர்களவரிடத்தில் வந்து அவ்ஸ்திரீயை அனுப்பிவிடும் அதேதென்றால் அவள் எங்கள் பிறகே சத்தமிடுகிறாளென்று சொல்லி அவரை மன்றாடினார்கள் ஸ

௨௰௪. ஆனால் அவர் பிரதியுத்தரமாக இஸ்ரயேலுடைய வீட்டினது தப்பிப்போன ஆடுகளுக்காகமாத்திரம் அனுப்பப்பட்டேனல்லாமல் மற்றப்படியல்லவென்று திருவுளம்பற்றினார் ஸ

௨௰௫. அப்பொ அவள் வந்து அவரை வணங்கி ஆண்டவரே எனக்கு உதவிசெய்யுமென்று சொன்னாள் ஸ

௨௰௬. ஆனால் அவர் அதற்குப் பிரதியுத்தரமாகப் பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு முன்னே போடுகிறது முறைமையல்லவென்று திருவுளம்பற்றினார் ஸ

௨௰௭. அதற்கவள் ஆம் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் தாங்கள் ஆண்டவமாருடைய அசனபீடத்தாலே விழுகிற துணுக்குகளைத் தின்னுதென்று சொன்னாள் ஸ

௨௰௮. அப்பொ யேசுநாதர் பிரதியுத்தரமாக ஓ ஸ்திரீயானவளே உன்னுடைய விசுவாசம் பெரிதாயிருக்குது நீ விரும்பினபடியே உனக்குச் சம்பவிக்கக்கடவதென்று அவளுக்குத் திருவுளம்பற்றினார் அந்த நாழிகையிலே தானே அவளுடைய மகள் சுகப்பட்டாள் ஸ

௨௰௯. அப்பொ யேசுநாதர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுக் கலிலேயாவின் கடலருகே வந்து மலையின் மேலேறி அங்கே உட்கார்ந்தார் ஸ

௩௰. அப்பொ அநேக ஜனங்களவரிடத்திலே வந்து தங்களுடனேகூடச் சப்பாணிகள் குருடர்கள் ஊமைகள் முடவர்கள் இப்படிக்கொத்த அநேகம் பேர்களை யேசுநாதருடைய பாதங்களுக்கு முன்னே போட்டார்கள் அவரவர்களைச் சொஸ்தப்படுத்தினார் ஸ

௩௰௧. அப்படியே ஊமைகள் பேசுகிறதையும் ஊனர்கள் சொஸ்தமானதையும் சப்பாணிகள் நடக்கிறதையும் குருடர்கள் காண்கிறதையும் ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு இஸ்ரயேலுடைய சருவேசுரனைப் பிரஸ்தாபித்தார்கள் ஸ

௩௰௨. அப்பொ யேசுநாதர் தம்முடைய சீஷர்களைத் தம்மிடமாக அழைத்து இந்த ஜனங்கள் மேல் இரக்கமாயிருக்கிறேன் அதெப்படியென்றால் மூன்று நாளாகத் தரித்து இன்ன

ங

ருப்பையிருக்கும் அவர்கள் போசிக்கும்படிக்கொன்றுமில்லாதபடியிருக்கும் இவர்கள் பெரியதாக்க மாகமன துருக்கிறும் இவர்கள் வழியிலே சோர்ந்துப்போகாதபடிக்கு இவர்களைப் பட்டினியாக அனுப்பிவிடுகிறதுக்கு மனசாயிருக்கவில்லையென்று திருவுளம்பற்றினார் ॥

௩௰௩. அவருடைய சீஷர்கள் இந்தப் பெருத்த சனங்களுக்குச் சம்பூரணமாகக்கும்படிக்கு இந்த வனாந்தரத்திலே எங்களுக்கு அத்தனையப்பங்கள் எங்கே கிடைக்குமென்று அவருக்குச் சொன்னார்கள் ॥

௩௰௪. அப்பொழுது யெசுநாதர் உங்களிடத்திலே எத்தனை அப்பமிருக்குதென்று அவர்களைக் கேட்டார் அதற்கவர்கள் ஏழு அப்பமுங் கொஞ்சம் பொடிமீனுமிருக்குதென்று சொன்னார்கள்.

௩௰௫. அவர் சனங்களைப் பணியத்தரையிலே யிருக்கக் கற்பித்து ॥

௩௰௬. அவர் அந்த ஏழப்பங்களையும் மீன்களையும் எடுத்து ஸ்தோத்திரஞ் செய்து பின்பு அதுகளைப் பிட்டுத் தம்முடைய சீஷர்களிடத்திலே கொடுத்தார் சீஷர்கள் சனங்களுக்குக் கொடுத்தார்கள் ॥

௩௰௭. அவர்கள் எல்லாருஞ் சாப்பிட்டுச் சம்பூரணமாகி மிகுந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள் ॥

௩௰௮. அங்கே சாப்பிட்டவர்கள் பெண்டுகளும் பிள்ளைகளுமல்லாமல் நாலாயிரமட்டவர்களாயிருந்தார்கள் ॥

௩௰௯. அவர் சனங்களைத் தம்மிடத்தாலே அனுப்பிவிட்டுப் படவிலே யேறி மக்தலாவினெல்லைகளிலே வந்தார் ॥

௰௬. அதிகாரம்.

௧ பரிசேயர்களுஞ் சதுசேயர்களுமொரு அடையாளங் கேட்டதினாலே கிறிஸ்துநாதராலே கடிந்து கொள்ளப்பட்டு யோனாவுடைய அடையாளத்தின் பேரிலே காண்பிக்கப்பட்டதும். ௫: கிறிஸ்துநாதர் தம் சீஷர்களுக்கு அவர்களுடைய புளித்தமாவுக்காக அறிவித்ததும். ௰௩: கிறிஸ்துநாதர் பேரிலே சனங்கள் கொண்டிருந்த பலவிதமான யோசனைகளும். ௰௬: பேதுருவுடைய மெய்யான விசுவாசத்தினையும் அவனாகக் கிறிஸ்துநாதரை மெய்த்துக் கொண்டு அவருக்குப் பரலோகராச்சியத்தின் திறவுகோல்களை வாக்குத்தத்தம் பண்ணினதும். உ௰௧: தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிக்கச் சொல்லிப் பேதுருவுடைய ஆலோசனையைத் தள்ளிப் போட்டதும். உ௰௪: கிறிஸ்துநாதரைப் பின்பற்றியார் சிலுவையைச் சுமந்து கொள்ளுகிறது அவசியமென்றதும். உ௰௭: கிறிஸ்துநாதர் தம்முடைய மகிமைப் பிரதாபத்திலே யெப்பொழுது வருவாரோ அதைக் கொண்டும் வருமாறு ॥

௧ அப்பொழுது பரிசேயர்களுஞ் சதுசேயர்களும் அவரிடத்திலே வந்து அவரைச் சோதிக்கிறதுக்குத் தங்களுக்கு வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காண்பிக்கவேணுமென்று அவரைக் கேட்டார்கள் ॥

௨. அவர் பிரதியுத்தரமாக அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது அந்திநேரமாகிறபோது வானஞ் சிவப்பாயிருக்கிறபடியால் நல்ல காலமென்று சொல்லுகிறீர்கள் ॥

௩. உதயகாலமே வானமிருண்டு சிவப்பாயிருக்கிறபடியால் இன்றைக்கு அகோதாரியாயிருக்குமென்றுஞ் சொல்லுகிறீர்கள் கபடர்களே வானத்தின் சாயலைப் பகுத்தறிய அறிந்திருக்கிறீர்கள் காலங்களின் அடையாளங்களைப் பகுத்தறிய உங்களாலே கூடாதோ ॥

௪. பொல்லாத விபசார அங்கிஷத்தார் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள் தீர்க்கதரிசியான யோனாவுடைய அடையாளமல்லாமல் வேறே அடையாளம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதில்லையென்று அவர்களைவிட்டு அப்பாலே போனார் ॥

௫. அவருடைய சீஷர்கள் அக்கரையிலே வந்தபோது அப்பங்களைக் கொண்டுவர மறந்துபோனார்கள் ॥

௬. அப்பொழுது யெசுநாதர் அவர்களிடத்திலே நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கோ பரிசேயர்களுடையவும் சதுசேயர்களுடையவும் புளிச்சமாவுக்கு உங்களைக் காத்துக் கொள்ளுங்கோவென்று திருவுளம்பற்றினார் ॥

௭. அதற்கவர்கள் அப்பங்களை நாங்கள் கொண்டுவாராததுக்காகவென்று சொல்லித் தங்களிலே விசாரப்பட்டார்கள் ॥

அ.

www.WordOfGod.in

௮. அதை யேசுநாதர் அறிந்து அவர்களுக்கு
த் திருவுளம்பற்றினதாவது அற்பவிசுவாசிகளே நீங்
கள் அப்பங்களைக் கொண்டுவரவில்லையென்று உங்
களிலே விசாரப்படுகிறதென்ன ஸ

